# பச்சைப்பயறு சாகுபடியில் ஒரு வெற்றிக்கதை

**மா.அ.வெண்ணிலா, ம. சங்கீதா மற்றும் பா.ச.சண்முகம்**

தருமபுரி மாவட்டத்தின் முக்கிய உணவுப் பயிர்கள் சாகுபடியில் நெல்லுக்கு அடுத்தபடியாக பயறுவகைப் பயிர்கள் பெரும்பங்கு வகிக்கின்றது இவற்றில் பச்சைப்பயறு சுமார் ஹெக்டர் 1526 பரப்பளவில் பயிரிடப்படுகின்றது. இதில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தினால் கடந்த 2015 ம் ஆண்டு வெளியிடப்பட்ட என்ற கோ (ஜி ஜி)8 என்ற இரகம் பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் செயல்விளக்கத்திடல்கள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. இது 10 விவசாயிகளின் வயல்களில் செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இதில் அதிக விளைச்சல் பெற்ற விவசாயியான திரு இரா. ஜெயம், த/பெ இராமசாமி, கானாப்பட்டி கிராமம், பாலவாடி அஞ்சல், நல்லம்பள்ளி வட்டாரம், தருமபுரி மாவட்டம் அவர்கள் தனது அனுபவங்களை இங்கே பகிர்ந்து கொள்கிறார்.

நான் கடந்த 30 வருடங்களாக விவசாயம் செய்து வருகின்றேன். சோளம், மிளகாய், கத்திரி, தக்காளி, நிலக்கடலை மற்றும் பயறு வகை பயிர்களை பயிர செய்து வந்தேன். கடந்த ஆண்டு வேளாண்மை அறிவியல் நிலையம் பாப்பாரப்பட்டி மூலம் கோ 8 என்ற பச்சைப்பயறு இரகத்தை அறிந்து கொண்டு சாகுபடி செய்தேன். இதில் பின்வரும் தொழில்நுட்பங்களை பயன்படுத்தினேன்.

**இரகம்** : கோ (ஜி ஜி)8

**பருவம்** : ஜுன் - ஜுலை

**வயது:** 65 நாட்கள்

**விதையளவு** : 8 கிலோ / ஏக்கர்

**விதை நேர்த்தி** : சூடோமோனாஸ் 10 கிராம் / கிலோ விதைக்கு என்றளவில் விதை நேர்த்தி செய்தேன். ரைசோபியம் ஒரு பாக்கெட் (200 கிராம்) / எக்டர் என்றளவில் விதை நேர்த்தி செய்தேன்.

**விதைப்பு**

விதை நேர்த்தி செய்த விதைகளை 45 X 15 செ.மீ என்ற இடைவெளியில் பயறு வகைப்பயிர்களில் விதைக்க கோடு போடும் கருவி கொண்டு விதைத்தேன்.

**உர மேலாண்மை**

நன்கு மக்கிய தொழு உரம் 1 டன் / கிலோ என்ற அளவில் மண்ணில் இடப்பட்டது. மேலும் 10:26:26 உரம் 100 கிலோ உரமிடப்பட்டது.

**மேலாண்மை**

இரண்டு முறை கைக்களை எடுக்கப்பட்டது.பூச்சி மற்றும் நோய் பொருளாதார சேத நிலையை விட குறைவாக இருந்ததால் எந்த வித மருந்தும் தெளிக்கவில்லை.

**வரவு செலவு**

| விபரம் | ஏக்கருக்கு (ரூ) |
|---|---|
| உழவு | 2,000 |
| விதைப்பு செய்ய ஆட்கூலி | 400 |
| தொழு உரம் | 1,500 |
| உர மேலாண்மை | 3,000 |
| களை எடுக்க | 800 |
| அறுவடை | 800 |
| **மொத்த செலவு** | **8,500** |

**வருமானம்**

| விபரம் | ஏக்கருக்கு (ரூ) |
|---|---|
| விளைச்சல் | 420 கிலோ |
| வருமானம் | ரூ 25,200/- |
| மொத்த வருமானம் | ரூ 16,700/- |

இந்த பச்சைப்பயறு இரகம் வரட்சியைத் தாங்கி வளர்ந்ததால் மானாவாரி நிலத்தில் அதிக விளைச்சல் பெற முடிந்தது. மேலும் 95 சதவீதம் ஒரே சமயத்தில் முதிர்ச்சி அடைந்ததால் ஒரே சமயத்தில் அறுவடை செய்ய முடிந்தது அறுவடை செலவும் குறைந்தது. மற்ற விவசாயிகளும் கோ 8 பச்சை பயறு இரகத்தை பயிரிடுவதன் மூலம் இலாபம் அடையலாம்.

முகவரி

திரு இரா. ஜெயம்,
த/பெ இராமசாமி,
கானாப்பட்டி கிராமம்,
பாலவாடி அஞ்சல்,
நல்லம்பள்ளி வட்டாரம்,
தருமபுரி மாவட்டம்
அலைபேசி : 9842679667

